**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.43/2015**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோவிந்தன் | மதம் | : இந்து |
| த/பெ | : முருகன் | ஜாதி | : -- |
| வயது | : 67 | கிராமம் | : மணவூர் |
| தொழில் | : ரயில்வே ஓய்வு | வட்டம் | : திருத்தணி |

**10.03.2026**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4. வழக்கு சொத்து எங்களுடைய பூர்வீக சொத்தோ அல்லது நாங்கள் கிரையம் வாங்கிய சொத்தோ இல்லை என்றால் சரிதான். A அட்டவணை சொத்து வருவாய் ஆவணங்களில் சாலை புறம்போக்காக உள்ளது என்றால் கிராம நத்தமாக உள்ளது. நான் சொல்வது பொய் என்றாலும் A அட்டவணை சொத்து வருவாய் ஆவணங்களில் சாலை புறம்போக்காக உள்ளது என்றாலும் சரியல்ல. 1993ல் கிராம நத்தத்திற்கு தமிழ்நாடு முழுவதும் பட்டா வழங்கும்போது என் மனைவிக்கு பட்டா கொடுக்கப்பட்டதா என்றால் பட்டா கொடுக்கப்பட்டது. நான் சொல்வதுபோல் கிராம நத்த நிலவரித்திட்டத்தின் கீழ் என் மனைவிக்கு பட்டா கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

5. நான் தற்போது உள்ள வீடு எந்த வருடம் கட்டப்பட்டது என்றால் 2002ல் கட்டப்பட்டதாகும். அதற்கு முன்பு அந்த இடத்தில் எதுவும் இல்லை என்றால் அதற்கு முன்பு குடிசை இருந்தது. 2002க்கு முன்பு குடிசை இருந்தது என்பதை காட்ட வரி ரசீதோ வேறு வருவாய் ஆவணங்களோ தாக்கல் செய்துள்ளோமா என்றால் சிறு குடிசை என்பதால் ரசீது கொடுக்க முடியாது என்றுவிட்டார்கள். 2002ல் வீடு கட்டி அனுபவித்து வருவதை காட்ட வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நான்

சொல்வதுபோல் எந்த ரசீதுகளும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது மாடி வீட்டிற்கு கிராம பஞ்சாயத்தில் ஏதேனும் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எனது பட்டா இடத்தின் அளவை காட்ட புல வரைபடமோ அ பதிவேடோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. எனது வீட்டை பிரதிவாதி மேஸ்திரியாக இருந்து வீடு கட்டி கொடுத்தார் என்றால் சரிதான். எனது A அட்டவணை சொத்திற்கு வடக்கு பக்கம் சிறிது காலி இடம் விட்டுதான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். A அட்டவணை சொத்திற்கு வடக்கே என் சகோதரரின் மனைவியான உஷாராணி வீடு கட்டியுள்ளார் என்றால் ஆமாம். எனக்கும் என் அண்ணனுக்கும் சுமுகமான உறவு உள்ளதா என்றால் எப்போதுமே உள்ளது. என் அண்ணன் மகனுக்குதான் பிரதிவாதியின் மகள் சுகன்யாவை திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் நாங்களாக திருமணம் செய்து வைக்கவில்லை. என் அண்ணன் மகனும் அந்த பெண்ணும் செய்து கொண்டார்கள்.

7. இன்றும் சுகன்யா என் அண்ணன் வீட்டில்தான் வாழ்ந்து வருகிறார் என்றால் ஆமாம். நான் வழக்கு தாக்கல் செய்திருக்கும் A அட்டவணை புல எண்.184/22க்குள்தான் வழக்கு சொத்து வருகிறது என்பதற்கு இரண்டு முறை இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அம்மனுக்கள் தள்ளுபடி ஆகியுள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று பிரதிவாதி கூறியிருப்பதால் நிலஅளவையரை வைத்து அளந்தால்தான் அவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளாரா இல்லையா என்பது தெரிய வரும் என்று கூறிதான் நான் மனு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். அவ்வாறு நான் தாக்கல் செய்த இடைமனு எண்.416/2017, 9/2025 ஆகியவை தள்ளுபடி ஆனது என்றால் ஆமாம். 23.03.2015 தேதியில் வழக்கு தாக்கல் செய்த அன்றே திரு. காத்தவராயன் என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டு மறு நாளே அவர் வழக்கு சொத்தை அளவீடு செய்ய வந்தார் என்றால் ஆமாம்.

8. நீதிமன்ற ஆணையர் நான் சொன்ன இடத்தைதான் அளவீடு

செய்தார் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்யும்போது நில அளவையரோ கிராம நிர்வாக அதிகாரியோ வழக்கு சொத்து இதுதான் என நிர்ணயம் செய்யவில்லை என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்த பின்பு வடக்கு தெற்கு, கிழமேல் அளவுகளையும் நான்கு எல்லைகளையும் திருத்தம் செய்தேன் என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்தபோது என் வீட்டின் வடக்கு தெற்கு, கிழமேல் அளவுகளையும் நான்கு எல்லைகளையும் சரியாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் என் வீட்டின் வடக்கு பக்கம் 2 1/2 அடி காலியிடம் போகவர சந்து இருந்ததாக அறிக்கை குறிப்பிட்டுள்ளார் என்றால் இல்லை. 1 1/4 அடிதான் உள்ளது.

9. நீதிமன்ற ஆணையர் என் வீட்டின் வடக்கு பக்கம் 2 1/2 அடி காலியிடம் இருந்ததாக தாக்கல் செய்த அறிக்கை தவறானது என நான் ஏதேனும் ஆட்சேபணை செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞர் பார்த்துக்கொள்வார். எனது சொத்திற்கு தெற்கில் அமாவாசையும் குடிசை வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் தெற்கே வேலிகாத்தான் செடிதான் உள்ளது. புல எண்.184/21ல் உள்ள சொத்தை பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் ஆமாம். அ.வ.எண்.73/2015 என ஒரு வழக்கை பிரதிவாதி தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அதில் பிரதிவாதிக்கு இடைக்கால உறுத்துக்கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது என்றால் ஆமாம். எனது சொத்திற்கு தெற்கே உள்ள புல எண்.184/21 தனக்கு சம்மந்தமில்லாத சொத்து என்று என் மனைவி பதில் தாக்கல் செய்தார் என்றால் இல்லை. எங்களுக்கு சேர வேண்டிய இடம் வேண்டும் என்றுதான் பதில் போட்டார்.

10. என் மனைவி பிரதிவாதி அவரது சொத்தை அனுபவிப்பதில் ஆட்சேபணை இல்லை என அ.வ.எண்.73/2015ல் பதில் தாக்கல் செய்தார் என்றால் இல்லை. அ.வ.எண்.73/2015 வழக்கு சம்மந்தமான நீதிமன்ற உத்தரவுகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அ.வ.எண்.73/2015 வழக்கு சம்மந்தமான நீதிமன்ற உத்தரவுகளை நான் படித்து பார்த்தேனா என்றால்

முழுவதுமாக படிக்கவில்லை. ஓரளவு படித்துள்ளேன். **(சாட்சி தற்போது பின்வருமாறு கூறுகிறார்)** படிக்கவில்லை. இந்த வழக்கில் பிரதிவாதி கட்டியுள்ள இடம் புல எண்.184/21 என்றுதான் பதில் தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. 7 அடி தள்ளி கட்டியுள்ளார். நான் அ.வ.எண்.73/2015ல் ஆட்சேபணை இல்லை என பதில் தாக்கல் செய்ததால் அவர் அந்த வழக்கை நடத்தவில்லை என்றால் நான் அவ்வாறு பதில் தாக்கல் செய்யவில்லை.

11. நீதிமன்ற ஆணையர் வந்த போது பிரதிவாதி எத்தனை அடி உயரத்திற்கு கட்டிடம் கட்டியதாக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் தரைமட்டத்திற்கு கடக்கால் போட்டிருந்தார். பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துவிட்டார் என்ற விவரத்தை நான் முதன்முதலில் வழக்கு தாக்கல் செய்யும்போதே சொன்னேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு எந்த விவரமும் சொல்லவில்லை என்றாலும் உண்மை விவரங்களை மறைத்து பொய்யான விவரங்களை கூறி என் மனைவி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. எனக்கு அசைமெண்ட் பட்டா கொடுத்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நத்தம் பட்டா வேறு அசைமெண்ட் பட்டா வேறு என்றால் சரியல்ல.

12. நான் பட்டா உண்மைதான் என்று வட்டாட்சியர் அலுவலகத்திலோ, கோட்டாட்சியர் அலுவலகத்திலோ, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலோ ஏதேனும் சான்று பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா உண்மைதான். நான் இந்திய ரயில்வே பணி செய்ததால் எனக்கோ என் குடும்பத்திற்கோ அரசாங்கத்தில் இருந்து இலவச பட்டா கொடுக்க முடியாது என்றாலும் நான் அரசாங்கம் இலவச பட்டா கொடுத்ததாக போலியாக ஆவணம் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்யும்போது சொத்து மதிப்பு எவ்வளவு இருந்தது என்றால் தெரியாது. இன்றைய தேதி வரை வழக்கு சொத்திற்கு அரசாங்க வழிகாட்டி மதிப்பு வரவில்லை என்றால் நான் அதை பார்க்கவில்லை. இந்த வழக்கை திருத்தம் செய்த போது சதுரடி மதிப்பை என்ன என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால்

எனக்கு தெரியாது.

13. வழக்கு சொத்து சதுரடி ரூ.1000/- இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பின்பு நான் பெற்ற இடைக்கால உத்தரவு நீட்டிப்பு செய்யப்படவில்லை என்றால் இல்லை. நான் பொய்யான விவரம் கூறி வழக்கு தாக்கல் செய்ததால் அந்த இடைக்கால உத்தரவை நீட்டிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பிராது பத்தி 5A ல் பிரதிவாதி புல எண்.184/21ல் வீடு கட்டியதாக சொல்லியுள்ளார் என்றால் தெரியாது. அவர் எங்கள் இடத்தில் 7 அடி கட்டியுள்ளார். எனது பிராது பத்தி 5A ல் பிரதிவாதி 23.04.2015ல் ஆக்கிரமிப்பு செய்துள்ள விவரம் நீதிமன்ற ஆணையர் பார்த்த பின்புதான் தெரிய வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அதற்கு முன்பே தெரிந்து கொண்டுதான் நான் இந்த வழக்கே தாக்கல் செய்தேன்.

14. பி அட்டவணை சொத்தே இல்லை என்றாலும் என் மனைவி தவறுதலாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. இதே நீதிமன்றத்தில் பிரதிவாதி நீதிமன்ற உத்தரவை மீறிவிட்டார் என மனு தாக்கல் செய்து அம்மனு நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. இடைமனு எண்.51/2017 தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் தள்ளுபடி ஆகவில்லை. இடைமனு எண்.50/2017ல் தற்போதுள்ள கடக்காலை இடித்து தள்ள வேண்டும் என்று தாக்கல் செய்து அதுவும் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் உயர் நீதிமன்றத்தில் இடிப்பதற்காக மனு தாக்கல் செய்தோம். அது முதலில் அளந்ததை வைத்தே அளந்து கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள்.

15. நான் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு மனு, கடக்காலை இடித்து தள்ள வேண்டும் என்ற மனு, நீதிமன்ற ஆணையர் மீண்டும் சொத்தை நிலஅளவையருடன் பார்வையிட வேண்டும் ஆகிய மனுக்கள் தள்ளுபடி ஆன பின்புதான் பிராதை சீர்த்திருத்தம் செய்தோம் என்றால் ஆமாம். நான் பிராதை திருத்தம் செய்த பின்பு நீதிமன்ற கட்டணம் எவ்வளவு திருத்தம் செய்துள்ளேன் என்றால் ரூ.2500/- செலுத்தியுள்ளோம். தாவா பி அட்டவணை சொத்திற்கான

நீதிமன்ற கட்டணம் குறைவாக செலுத்தியுள்ளேன் என்றால் நீதிமன்றம் கேட்டதைதான் கட்டியுள்ளேன். தாவா பி அட்டவணை சொத்திற்கு பிராதில் கூறியுள்ள அளவிற்கு 7.5 சதவீதம் நீதிமன்ற கட்டணம் செலுத்தியிருக்க வேண்டும் என்றாலும் 3 சதவீதம்தான் நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றாலும் அதனால் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

16. நான் இந்த வழக்கை முன்விரோதம் காரணமாக பிரதிவாதி வீடு கட்டுவதை தடுக்க உண்மை விவரங்களை மறைத்து பொய்யான விவரங்களை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் இல்லை. நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வெறும் பட்டாவை மட்டும் வைத்து கொண்டு எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி அவருக்கு சொந்தமான புல எண்.184/21ல்தான் வீடு கட்டியுள்ளார் என்றாலும் நான் இல்லாத பி அட்டவணையில் பரிகாரம் கோரியுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் புல எண்.184/22ல்தான் 7 அடி கட்டியுள்ளார் என்பதற்கு தகுந்த ஆவணங்களுடன் நிரூபிக்க தவறியதால் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. புல எண்.184/21ல்தான் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்றாலும் அவர் பி அட்டவணை சொத்தில் எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் A அட்டவணை சொத்தில் உரிய வருவாய் அதிகாரிகளுடன் நிர்ணயம் செய்யாமல் நான் குறிப்பிட்ட அளவை வைத்து தாக்கல் செய்த அறிக்கை வரைபடம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிராதில் நான் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் என் வழக்கு வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)